**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.43/2020- PW-1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.S.C.சஞ்சீவ் குமார் | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.சந்திரசேகரன் | Occupation | தனியார் நிறுவனத்தில் வேலை |
| Village /Area | காரை | Age | 52 |
| Taluk | வாலாஜா | ID Card No. | Verified |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 22.09.2025.

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்யும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துகள் என்னுடைய கையெழுத்துகள் தான். அந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் என் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். 18.10.2002 தேதியிட்ட நான் வழக்கு சொத்தை காலிமனையாக கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 17.03.2011 தேதியிட்ட நான் 1-ம் பிரதிவாதிக்கு ஆவணங்களை வைப்பீடு செய்ததற்கான பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 21.04.2011 தேதியிட்ட நான் 2-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகாரப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும். 14.06.2011 தேதியிட்ட 2-ம் பிரதிவாதி எனது பொது அதிகார முகவர் என்ற முறையில் 5-ம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திக்கொண்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும். 31.10.2017 தேதியிட்ட 1-ம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த அடமான கடன் பைசல் ரசீது சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகும். 31.10.2017 தேதியிட்ட 5-ம் பிரதிவாதியும் 2-ம் பிரதிவாதியும் சேர்ந்து எழுதிக்கொண்ட கிரைய ஒப்பந்த ரத்து பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகும். 31.10.2017 தேதியிட்ட எனது பொது அதிகார முகவர் என்ற முறையில் 2-ம் பிரதிவாதி 4-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆகும். 01.11.2017 தேதியிட்ட நான் எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்வதற்காக ரத்து ஆவண மாதிரி வரைவு அசல் **வா.சா.ஆ.8** ஆகும். 02.11.2017 தேதியிட்ட நான் 6-ம் பிரதிவாதியிடம் சமர்ப்பித்த ஆட்சேபனை மனு அலுவலக நகல் **வா.சா.ஆ.9** ஆகும். 02.11.2017 தேதியிட்ட

இராணிப்பேட்டை காவல் ஆய்வாளருக்கு நான் கொடுத்த புகார் அலுவலக நகல் **வா.சா.ஆ.10** ஆகும். 14.12.2017 தேதியிட்ட நான் வேலூர் மாவட்ட நில அபகரிப்பு குற்ற தடுப்பு பிரிவில் கொடுத்த புகார் அலுவலக நகல் **வா.சா.ஆ.11** ஆகும். 26.12.2017 தேதியிட்ட அரக்கோணம் மாவட்ட பதிவாளர் எனக்கு அனுப்பிய பதில் கடிதம் **வா.சா.ஆ.12** ஆகும். 11.01.2018 தேதியிட்ட பதிவுத்துறை தலைவர் அவர்கள் வேலூர் மாவட்ட பதிவாளருக்கு அனுப்பிய கடிதத்தின் அசல் **வா.சா.ஆ.13** ஆகும். 09.03.2018 தேதியிட்ட வாலாஜா சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ரசீது திருத்தல் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.14** ஆகும். 30.06.2018 தேதியிட்ட 4–ம் பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.15** ஆகும். 04.07.2018 தேதியிட்ட எனது தரப்பு வழக்கறிஞர் என் சார்பாக 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.16** ஆகும். 06.07.2018 தேதியிட்ட இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் எனக்கு வழங்கப்பட்ட CSR.No.267/2018 அசல் **வா.சா.ஆ.17** ஆகும். 12.07.2018 தேதியிட்ட 1 முதல் 3 பிரதிவாதிகளின் சார்பாக அவருடைய வழக்கறிஞர் என் தரப்பு வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.18** ஆகும். 16.07.2018 தேதியிட்ட நான் நில அபகரிப்பு தடுப்பு பிரிவுக்கு அனுப்பிய நினைவூட்டல் கடிதம் அலுவலக நகல் **வா.சா.ஆ.19** ஆகும். 20.07.2018 தேதியிட்ட 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் குற்ற எண்.38/2018–ன் படி குற்றப்பிரிவு காவல் துறையால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை இணையதள பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.20** ஆகும். 06.06.2018 தேதியிட்ட என் மீது 1–வது பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த C.S.No.443/2018–ல் வழக்குரை வாதிக்கு சார்வு செய்யப்பட்டது நகல் **வா.சா.ஆ.21** ஆகும். 29.08.2017 தேதியிட்ட மின் கட்டண ரசீதுகள் அசல் **வா.சா.ஆ.22** ஆகும். 07.03.2018 தேதியிட்ட வாதி இராணிப்பேட்டை நகராட்சிக்கு செலுத்திய சொத்து வரி ரசீதுகள் ( 2–எண்ணிக்கை) அசல் **வா.சா.ஆ.23** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டிக்கொள்கிறேன்.

( 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Court,
Ranipet